உண்ணாவிரதம் இருந்து எவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டது என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நினைவிற்குக் கொண்டுவந்து, எவ்வளவு பணக்குறைவு இருந்தாலும், தங்களுடைய சொந்த முயற்சியிலே, இந்த ஆண்டிலேயே நிதியை ஒதுக்கி, எங்களுக்குக் கட்டித்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பெண் மருத்துவர் இல்லை என்ற பிரச்சினை ஏற்பட்டு அங்கே இருக்கின்ற பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தினார்கள். அந்த நேரத்திலே அதற்காகப் பெண் மருத்துவர் நியமிக்கப்பட்டார். இப்போது அங்கே இரண்டு மருத்துவர்கள் இருக்கின்றார்கள். மொத்தம் மூன்று மருத்துவர்கள் இருக்கின்ற இடம். ஒரு இடம் காலியாக இருக்கிறது. மற்ற இரண்டும் நிரப்பப்பட்டு விட்டன. விரைவிலே அதையும் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். குவார்டர்ஸைப் பொறுத்தவரையில், இருக்கின்ற நிலைமைகளை நான் ஏற்கனவே தெரிவித்தேன், இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அங்கே இருக்கின்ற குவார்டர்ஸை ரிப்பேர் செய்து தரமுடியுமா என்று பார்த்து, முடியாது என்ற நிலை இருக்குமானால் வருகின்ற ஆண்டுகளிலே எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 105, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**105—**

## அம்பாசமுத்திரம் தொகுதியில் பென்சிலின் தொழிற்சாலை ஆரம்பித்தல்

***38098**-*திரு. ஆர். முருகையா பாண்டியன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதியில் பென்சிலின் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதியில் பென்சிலின் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை.

*திரு. ஆர். முருகையா பாண்டியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் இப்படி ஒரு பென்சிலின் தொழிற்சாலை வருவதாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மத்திய தொழிற்துறை இணை அமைச்சர் அவர்கள் அங்கே வருகின்ற நேரங்களில் எல்லாம், அம்பாசமுத்திரத்திற்கு ஒரு பென்சிலின் தொழிற்சாலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பல மேடைகளிலும் சொல்லி வருகிறார்கள். ஆனால், அப்படி எந்தவித தொழிற்சாலையும் என்னுடைய தொகுதியில், நான் பார்த்தவரையில், அமைக்கக்கூடிய வாய்ப்பே இல்லை. எனவே, அப்படி ஏதாவது தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா என்று கேட்டதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். அப்படியானால் மத்திய அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற கருத்து தவறானதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரை நல்வாழ்வுத் துறையிலே ஏதாவது தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டம் இருக்கின்றதா என்பதுதான். இந்தத் துறையைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை. காரணம், நமக்குத் தேவையான பென்சிலின் என்பது, மேக்ஸிமம் 2 டன்னிலிருந்து 3 டன் வரை தேவைப்படும். ஆனால், தொழிற்சாலையிலே குறைந்தபட்சம் 1000 டன்னாவது உற்பத்தியானால்தான் அந்தத் தொழிற்சாலை 'வயபிளாக்' இருக்கும். எனவே, அதன் காரணத்தால் இந்தத் துறையின் சார்பாக நம்மால் துவங்க முடியாது. ஒருவேளை தொழிற்துறையின் சார்பாக ஏதாவது அதைப்பற்றி குறிப்பு இருக்கலாம். எனவே, அந்தக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அப்படி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இல்லை. ஆரம்பிக்கின்ற திட்டமும் இல்லை. ஆனால், தொழில் துறையைப் பொறுத்தவரை ஏதாவது துவங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கலாம். அல்லது அதுபோல திட்டம் எதுவும் வைத்திருக்கலாம். எனவே, அதை தொழில் துறையிலே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

*திரு. ஆர். முருகையா பாண்டியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தைப் பொறுத்தவரையில் பென்சிலின் தொழிற்சாலை அமைப்பதற்கான, சாதகமான சூழ்நிலை உள்ள இடம். தண்ணீர் வசதி, இடவசதி, இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற பொதிகைமலைத் தென்றல் காற்றுடன் எல்லா மூலிகைகளும் உள்ள மலைப்பிரதேசமாக இருக்கின்ற காரணத்தால்-மத்திய அமைச்சர் சொன்ன கருத்து தவறானதா என்று தெரியவில்லை-தமிழக அரசாங்கம் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னபடி அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டம் இந்தத் துறையிலே இல்லை. ஆனால் தொழில் துறையிலே ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள தனிக் கேள்வி போட்டுத் தெரிந்து கொள்ளலாம். இந்தத் துறையைப் பொறுத்தவரை அப்படி திட்டம் எதுவும் இல்லை. நாம் ஒரு தொழிலைத் துவங்க வேண்டுமானால் அது சிரமமான காரியம். அதைப் பார்த்துக் கொண்டிருந்தால், இந்தத் துறையின் மற்ற வேலைகள் கெட்டுவிடும் என்ற காரணத்தால், அதைச் செய்வதற்கு இந்தத் துறை தயாராக இல்லை. எனவே, தொழில் துறையின் மூலமாக இதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 106, திரு. எம்.கே. பாலன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

106—

## சிறுவர் பூங்காவில் நவீன விளையாட்டுச் சாதனங்கள் அமைத்தல்

***19787**-திரு. எம். கே. பாலன்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கிண்டி, காந்திமண்டபம் சிறுவர் பூங்காவில் நவீன விளையாட்டுச் சாதனங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, கிண்டி, காந்தி மண்டபம் சிறுவர் பூங்காவில் நவீன விளையாட்டு சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. போதுமான எண்ணிக்கையில் பலவித விளையாட்டுச் சாதனங்கள் தற்போது உள்ளன.